# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி : www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 219/பேரூ/2023**
**நாள்: 03.10.2023**

திரு. கே. இப்ராஹிம்,
குன்னத்தூர், ஆரணி வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம். .... மனுதாரர்

செயல் அலுவலர்,
சேத்துப்பட்டு சிறப்புநிலை பேரூராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம். .... எதிர்மனுதாரர்

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், குன்னத்தூர், கதவு எண் 3/200, புதுத்தெரு என்ற முகவரியைச் சேர்ந்த மனுதாரர் திரு. கே. இப்ராஹிம் என்பவாது 15.07.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.07.2023 அன்று பெறப்பட்டு 219/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், குன்னத்தூர், கதவு எண் 3/200, புதுத்தெரு என்ற முகவரியைச் சேர்ந்த மனுதாரர் திரு. கே. இப்ராஹிம் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டம், சேத்துப்பட்டு சிறப்பு நிலை பேரூராட்சியில் அமைந்துள்ள திவ்யா கல்வி அறக்கட்டளைக்குச் சொந்தமான மெட்ரிக்பள்ளி, ஆசிரியர் பயிற்சி பள்ளி, திவ்யா பாலிடெக்னிக் கல்லூரி, திவ்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திவ்யா உயர்நிலைப் பள்ளி என இயங்கி வருகிறது. இந்த திவ்யா கல்வி நிறுவனம் தரைத்தளம் முதல் மூன்று மாடிகளைக்

கொண்ட கல்வி நிறுவனம் ஆகும். இந்த கல்வி நிறுவனத்தில் 1000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். திவ்யா கல்வி நிறுவனம், சேத்துப்பட்டு சிறப்பு நிலை பேரூராட்சியில் உரிய அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் 1995ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை சேத்துப்பட்டு சிறப்பு நிலை பேரூராட்சிக்கு சொத்துவரி, இதர வரிகளை கட்டப்படவில்லை.

மேலும் சேத்துப்பட்டு சிறப்பு நிலை பேரூராட்சி முன்னாள் மற்றும் தற்போது செயல் அலுவலர்கள், பிற அதிகாரிகள் வரி வசூலிக்க எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த 30 ஆண்டுகளாக அந்த கல்வி நிறுவனம் அமைந்துள்ள இடம் தமிழ்நாடு வக்ஃப் வாரியம் சார்ந்தது. அரசு சொத்தினை பாதுகாக்க வேண்டிய செயல் அலுவலர் மற்றும் பிற அதிகாரிகள் திவ்யா கல்வி நிறுவனத்திடம் கூட்டு சேர்ந்து உள்ளனர். திவ்யா கல்வி நிறுவனம் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திடம் முறையாக தடையில்லாச் சான்று பெறவில்லை. போலி பட்டா, பத்திரங்களை உருவாக்கி போலியான கட்டட வரைபடம் வழங்கப்பட்டுள்ளது. எனவே திவ்யா கல்வி நிறுவனம் 30 ஆண்டுகளாக செலுத்தாமல் உள்ள சொத்துவரி இன்னும் இதர பிற வரிகளையும் வசூல் செய்ய வேண்டும் என பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விளக்க அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 08.08.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் சேத்துப்பட்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.**

**3) சேத்துப்பட்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 24.08.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-**

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டம், சேத்துப்பட்டு சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட செஞ்சி சாலையில் இயங்கி வரும் திரு. பா. செல்வராஜன், தாளாளர், மேனேஜிங் டிரஸ்ட் என்ற கல்வி நிறுவனத்திற்கு கட்டட அனுமதி 2004–2005ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட விவரப்படி ஆவணங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என தெரியவருகிறது.

| வ. எண் | கட்டட உரிமம் எண் | வரி விதிப்பு எண் | பெயர்/விலாசம் | கட்டட உரிமம் அனுமதிக்கப் பட்ட நாள் | கட்டட உரிமம் முடிவுற்ற நாள் | வரிவிதிப்பு செய்யப்பட்ட ஆண்டு | வரி விதிப்பு தொகை ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 38/2004 –05 | 6307 | திரு. B. செல்வராஜன் தாளாளர் மேனேஜிங் டிரஸ்ட், B. செல்வராஜன் கல்வி அறக்கட்டளை, 15/23, பாலமுருகன் தெரு பழம்பேட்டை சேத்துப்பட்டு | 17.11.04 | 16.10.07 | 2008–2009 முதல் 2021–22 வரை | 15368 x 14 =215152 | 215152 |
| | | | | வரி சீராய்விற்கு பின் மற்றும் சேவை வரி | | 2022–2023 முதல் 2023–24 வரை | 25650 x 2 = 51300 | 51300 |
| | | | | | | | Total | **266452** |
| 2 | 38/2004 –05 | 6308 | திரு. B. செல்வராஜன் தாளாளர் மேனேஜிங் டிரஸ்ட், B. செல்வராஜன், கல்வி அறக்கட்டளை 15/23, பாலமுருகன் தெரு பழம்பேட்டை சேத்துப்பட்டு | 17.11.04 | 16.10.07 | 2008–2009 முதல் 2021–22 வரை | 13010 x 14 =182140 | 182140 |
| | | | | வரி சீராய்விற்கு பின் மற்றும் சேவை வரி | | 2022–2023 முதல் 2023–24 வரை | 21898 x 2 = 43796 | 43796 |
| | | | | | | | Total | **225936** |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 38/2004<br>–05 | 6315 | திரு. B. செல்வராஜன்<br>தாளாளர் பேனேஜிங்<br>டிரஸ்ட், | 22.11.04 | 21.10.07 | 2008–2009<br>முதல்<br>2021–22 வரை | 9108 x 14<br>=127512 | 127512 |
| | | | B. செல்வராஜன்<br>கல்வி அறக்கட்டளை,<br>15/23, பாலமுருகன் தெரு<br>பழம்பேட்டை சேத்துப்பட்டு | வரி சீராய்விற்கு பின்<br>மற்றும் சேவை வரி | | 2022–2023<br>முதல்<br>2023–24 வரை | 15690 x 2 = 31380 | 31380 |
| | | | | | | | Total | **158892** |
| 4 | 40/2004<br>–05 | 6306 | திரு. B. செல்வராஜன்<br>தாளாளர் பேனேஜிங்<br>டிரஸ்ட், | 22.11.04 | 21.10.07 | 2008–2009<br>முதல்<br>2021–22 வரை | 13010 x 14 =<br>182140 | 182140 |
| | | | B. செல்வராஜன்,கல்வி<br>அறக்கட்டளை<br>15/23, பாலமுருகன் தெரு<br>பழம்பேட்டை சேத்துப்பட்டு | வரி சீராய்விற்கு பின்<br>மற்றும் சேவை வரி | | 2022–2023<br>முதல்<br>2023–24 வரை | 21898 x 2 = 43796 | 43796 |
| | | | | | | | Total | **225936** |
| 5 | 40/2004<br>–05 | 6316 | திரு. B. செல்வராஜன்<br>தாளாளர் பேனேஜிங்<br>டிரஸ்ட், | 22.11.04 | 21.10.07 | 2008–2009<br>முதல்<br>2021–22 வரை | 15368 x 14<br>=215152 | 215152 |
| | | | B. செல்வராஜன்<br>கல்வி அறக்கட்டளை<br>15/23, பாலமுருகன் தெரு<br>பழம்பேட்டை சேத்துப்பட்டு | வரி சீராய்விற்கு பின்<br>மற்றும் சேவை வரி | | 2022–2023<br>முதல்<br>2023–24 வரை | 25650 x 2 =<br>51300 | 51300 |
| | | | | | | | Total | **266452** |
| 6 | 52/2004<br>–05 | 6318 | திரு. B. செல்வராஜன்<br>தாளாளர் பேனேஜிங்<br>டிரஸ்ட், | 23.11.2007 | 22.12.10 | 2011–2012<br>முதல்<br>2021–22 வரை | 83636 XII =919996 | 919996 |
| | | | B. செல்வராஜன்<br>கல்வி அறக்கட்டளை<br>15/23, பாலமுருகன் தெரு<br>பழம்பேட்டை சேத்துப்பட்டு | வரி சீராய்விற்கு பின்<br>மற்றும் சேவை வரி | | 2022–2023<br>முதல்<br>2023–24 வரை | 134256 x 2 =<br>268512 | 268512 |
| | | | | | | | Total | **1188508** |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 52/2007<br>–08 | 6319 | திரு. B. செல்வராஜன்<br>தாளாளர் பேனேஜிங்<br>டிரஸ்ட், | 23.11.2007 | 22.12.10 | 2011–2012<br>முதல்<br>2021–22 வரை | 89578 x 11<br>=985358 | 985358 |
| | | | B. செல்வராஜன்<br>கல்வி அறக்கட்டளை<br>15/23, பாலமுருகன் தெரு<br>பழம்பேட்டை சேத்துப்பட்டு | வரி சீராய்விற்கு பின்<br>மற்றும் சேவை வரி | | 2022–2023<br>முதல்<br>2023–24 வரை | 143710 x 2 =<br>287420 | 287420 |
| | | | | | | | Total | **1272778** |
| 8 | 53/2007<br>–08 | 6317 | திரு. B. செல்வராஜன்<br>தாளாளர் பேனேஜிங்<br>டிரஸ்ட், | 23.11.2007 | 22.12.10 | 2011–2012முதல்<br>2021–22 வரை | 51,226 x 11<br>=563486 | 563486 |
| | | | திரு. B. செல்வராஜன்,<br>கல்வி அறக்கட்டளை<br>15/23, பாலமுருகன் தெரு<br>பழம்பேட்டை சேத்துப்பட்டு | வரி சீராய்விற்கு பின்<br>மற்றும் சேவை வரி | | 2022–2023<br>முதல்<br>2023–24 வரை | 82696 x 2 =<br>165392 | 165392 |
| | | | | | | | Total | **728878** |
| 9 | 55/2004<br>–05 | 6311 | திரு. B. செல்வராஜன்<br>தாளாளர் பேனேஜிங்<br>டிரஸ்ட், | 10.01.2005 | 9.1.2008 | 2009–2010<br>முதல்<br>2021–22 வரை | 18946 x 12<br>=227352 | 227352 |
| | | | திரு. B. செல்வராஜன்,<br>கல்வி அறக்கட்டளை<br>15/23, பாலமுருகன் தெரு<br>பழம்பேட்டை சேத்துப்பட்டு | வரி சீராய்விற்கு பின்<br>மற்றும் சேவை வரி | | 2022–2023<br>முதல்<br>2023–24 வரை | 28328 x 2 = 56656 | 56656 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Total | **284008** |
| 10 | 55/2004 –05 | 6314 | திரு. B. செல்வராஜன் தாளாளர் மேனேஜிங் ட்ரஸ்ட், திரு. B. செல்வராஜன், கல்வி அறக்கட்டளை 15/23, பாலமுருகன் தெரு பழம்பேட்டை. சேத்துப்பட்டு | 10.02.2005 | 9.1.2008 | 2009–2010 முதல் 2021–22 வரை | 16588 x 12 =199056 | 199056 |
| | | | | வரி சீராய்விற்கு பின் மற்றும் சேவை வரி | | 2022–2023 முதல் 2023–24 வரை | 27592 x 2 = 55184 | 55184 |
| | | | | | | | Total | **254240** |
| 11 | 56/2004 –05 | 6309 | திரு. B. செல்வராஜன் தாளாளர் மேனேஜிங் ட்ரஸ்ட், திரு. B. செல்வராஜன், கல்வி அறக்கட்டளை 15/23, பாலமுருகன் தெரு பழம்பேட்டை. சேத்துப்பட்டு | 10.02.2005 | 09.01.08 | 2009–2010 முதல் 2021–22 வரை | 20072 x 12 =240864 | 240864 |
| | | | | வரி சீராய்விற்கு பின் மற்றும் சேவை வரி | | 2022–2023 முதல் 2023–24 வரை | 33136 x 2 = 66272 | 66272 |
| | | | | | | | Total | **307136** |
| 12 | 56/2004 –05 | 6310 | திரு. B. செல்வராஜன் தாளாளர் மேனேஜிங் ட்ரஸ்ட், திரு. B. செல்வராஜன், கல்வி அறக்கட்டளை 15/23, பாலமுருகன் தெரு பழம்பேட்டை. சேத்துப்பட்டு | 10.02.2005 | 09.01.08 | 2009–2010 முதல் 2021–22 வரை | 18098 x 12 =217176 | 217176 |
| | | | | வரி சீராய்விற்கு பின் மற்றும் சேவை வரி | | 2022–2023 முதல் 2023–24 வரை | 29994 x 2 = 59988 | 59988 |
| | | | | | | | Total | **277164** |
| 13 | 62/2004 –05 | 6312 | திரு. B. செல்வராஜன் தாளாளர் மேனேஜிங் ட்ரஸ்ட், திரு. B. செல்வராஜன், கல்வி அறக்கட்டளை 15/23, பாலமுருகன் தெரு பழம்பேட்டை. சேத்துப்பட்டு | 17.03.2005 | 16.03.08 | 2008–2009 முதல் 2021–22 வரை | 38148 x 12 =457776 | 457776 |
| | | | | வரி சீராய்விற்கு பின் மற்றும் சேவை வரி | | 2022–2023 முதல் 2023–24 வரை | 61890 x 2 = 123780 | 123780 |
| | | | | | | | Total | **581556** |
| 14 | 62/2004 –05 | 6313 | திரு. B. செல்வராஜன் தாளாளர் மேனேஜிங் ட்ரஸ்ட், திரு. B. செல்வராஜன், கல்வி அறக்கட்டளை 15/23, பாலமுருகன் தெரு பழம்பேட்டை. சேத்துப்பட்டு | 17.03.05 | 16.3.08 | 2009–2010 முதல் 2021–22 வரை | 38148 x 12=457776 | 457776 |
| | | | | வரி சீராய்விற்கு பின் மற்றும் சேவை வரி | | 2022–2023 முதல் 2023–24 வரை | 61890 x 2 = 123780 | 123780 |
| | | | | | | | Total | **581556** |
| 15 | 62/2004 –05 | 6320 | திரு. B. செல்வராஜன் தாளாளர் மேனேஜிங் ட்ரஸ்ட், திரு. B. செல்வராஜன், கல்வி அறக்கட்டளை 15/23, பாலமுருகன் தெரு பழம்பேட்டை. சேத்துப்பட்டு | 17.03.2005 | 16.03.08 | 2008–2009 முதல் 2021–22 வரை | 35128 x 12 =421536 | 421536 |
| | | | | வரி சீராய்விற்கு பின் மற்றும் சேவை வரி | | 2022–2023 முதல் 2023–24 வரை | 57084 x 2 = 114168 | 114168 |
| | | | | | | | Total | **535704** |
| | | | | | | | Grand Total | **7155196** |

மேற்கண்ட விவரப்படி திரு.பா.செல்வராஜன், தாளாளர், மேனேஜிங் டிரஸ்ட், செல்வராஜன் கல்வி அறக்கட்டளை என்ற கல்வி நிறுவனத்திற்கு கட்டட அனுமதி அளிக்கப்பட்டு கட்டட அனுமதி முடிவுற்ற காலத்திலிருந்து நாளது தேதி வரை 2008–2009 முதல் 2023 – 2024 வரை சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பா.செல்வராஜன் தாளாளர் மேனேஜிங் டிரஸ்ட், செல்வராஜன் கல்வி அறக்கட்டளை என்ற பெயரில் மனுதாரால் கட்டட அனுமதிகோரி சமர்ப்பிக்கப்பட்ட கிரைய பத்திரப்பதிவு ஆவணங்களின் அடிப்படையில் கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டம், சேத்துப்பட்டு சிறப்புநிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட செஞ்சி சாலையில் இயங்கிவரும் திரு பா. செல்வராஜன், தாளாளர், மேனேஜிங் டிரஸ்ட், செல்வராஜன் கல்வி அறக்கட்டளை கட்டடம் உரிமம் வழங்கப்பட்டு முடிவுற்ற தேதியிலிருந்து சொத்து வரி கேட்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது (2008–09ஆம் ஆண்டு முதல் 2023–2024 வரை) என்பதை தங்கள் மேலான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**4) மனுதாரர் மற்றும் சேத்துப்பட்டு சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 12.09.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.09.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5) 12.09.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

நான் திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், குன்னத்தூர் வருவாய் கிராமம் கதவு எண் 3/200, புதுத்தெரு என்ற முகவரியில் நிலையாக வசித்து வருகிறேன்; சமூக ஆர்வலராகவும் உள்ளேன். திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டம், சேத்துப்பட்டு சிறப்பு நிலை பேரூராட்சியில் அமைந்துள்ள திவ்யா கல்வி அறக்கட்டளைக்குச் சொந்தமான மெட்ரிக்பள்ளி, ஆசிரியர் பயிற்சி பள்ளி, திவ்யா பாலிடெக்னிக் கல்லூரி, திவ்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திவ்யா உயர்நிலைப் பள்ளி என இயங்கி வருகிறது. மேற்கண்ட கல்வி நிறுவனம் தமிழ்நாடு வக்ஃப் வாரிய இடத்தில் முறைகேடாக ஆக்கிரமிப்பு செய்து உள்ளனர். மேலும் திவ்யா கல்வி நிறுவனம் நகர் ஊரமைப்புத்துறையில் முறையாக அனுமதி பெறவில்லை. கல்வி நிறுவனக் கட்டடங்களின் அளவை குறைத்து சொத்து வரி செலுத்தினால் சேத்துப்பட்டு சிறப்புநிலை பேரூராட்சிக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்படும். மேலும் இப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் முறையாக வரி செலுத்தாமல் இருப்பதால் வருவாய் இழப்பு பேரூராட்சிக்கு ஏற்படுகிறது. திவ்யா கல்வி நிறுவனம் பள்ளி குழந்தைகள், ஆசிரியர்கள், பொது மக்கள் பயன்பாட்டிற்கான கட்டடம் என்பதால் 1973ம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 33ன்படி கட்டடத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்கத்தின் (Directorate of Town and Country Planning) முறையான ஒப்புதல் பெறவில்லை.

மேலும் குழந்தைகள், ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய இடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டடங்கள் உரிமம் சட்டம் 1965 பிரிவு 2(8)–ன்படி (Section 2(8) of the Tamil Nadu Public Buildings (Licensing Act 1965) முறையாக உரிமம் பெற்று முறைப்படி அவ்வப்போது புதுப்பிப்பதும் அவசியமாகும். நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49ன்படி தேவைப்படும் அனுமதிக்கு மாறாக இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது. எனவே மேற்படி திவ்யா கல்வி அறக்கட்டளைக்கு சொந்தமான மெட்ரிக் பயிற்சிப் பள்ளி, திவ்யா பாலிடெக்னிக் கல்லூரி, திவ்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திவ்யா உயர்நிலைப் பள்ளி என இயங்கி வரும் நிறுவனங்கள் தமிழ்நாடு வக்ஃப்

வாரிய இடத்தில் முறைகேடாக ஆக்கிரமித்து கட்டட அனுமதிக்கு புறம்பாக கட்டடம் கட்டி, சொத்துவரி, தொழில்வரி செலுத்தாமல் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பீடு செய்தும், உரிய துறைகளில் முறையாக அனுமதி பெறாமலும் சட்டத்துக்கு புறம்பாக செயல்படுவதால் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971ன் பிரிவுகள் 56 மற்றும் 57ன் கீழ் கட்டட வளாகத்தை பூட்டுதல் மற்றும் முத்திரையிடுதல் (Lock and Seal Prosecution) மற்றும் அமலாக்க நடவடிக்கையும் மேற்கொண்டு விரைவாக திவ்யா, கல்வி நிறுவன கட்டடத்தை சீல்வைக்க வேண்டும் மற்றும் 30 வருடங்களாக சொத்து வரி தொழில் வரி செலுத்தாத திவ்யா கல்வி நிறுவனம் கட்டிடங்களை அகற்றவும் (Remove) கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் சேத்துப்பட்டு சிறப்பு நிலை பேரூராட்சி துணைத் தலைவராக உள்ள திருமதி.S.திலகவதி அவர்கள் சார்ந்த கல்வி நிறுவனம் மிகப்பெரிய வருவாய் இழப்பு செய்துள்ளது. எனவே இவரின் பதவியினை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் எனவும் சேத்துப்பட்டு சிறப்பு நிலை பேரூராட்சியில் 2002 ஆம் ஆண்டு முதல் பேரூராட்சி செயல் அலுவலர்கள், அரசாணை 78ன்படி வணிக வளாகக் கட்டடங்களுக்கு 2000 சதுர.அடிக்கு மேல் பேரூராட்சிக்கு வழங்க அனுமதியில்லை. ஆனால் சேத்துப்பட்டு சிறப்புநிலை பேரூராட்சியில் அமைந்துள்ள திவ்யா கல்வி அறக்கட்டளைக்கு சொந்தமான மெட்ரிக்பள்ளி, ஆசிரியர் பயிற்சி பள்ளி, திவ்யா பாலிடெக்னிக் கல்லூரி, திவ்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திவ்யா உயர்நிலைப் பள்ளிக்கு சுமார் 1,23,000 சதுர அடிக்கு அனுமதி கொடுத்துள்ளனர். இது சம்பந்தப்பட்ட சேத்துப்பட்டு சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் முன்னாள் மற்றும் இந்நாள் வரையுள்ள அலுவலர்கள் மீது துறைரீதியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் மற்றும் லஞ்சம் மற்றும் ஊழல் அமலாக்கத்துறை நடவடிக்கை எடுக்க ஆவனச் செய்யுமாறு முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

**6) சேத்துப்பட்டு பேரூராட்சியின் செயல் அலுவலர் 12.09.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு பேரூராட்சிக்குட்பட்ட செஞ்சி சாலையில் இயங்கிவரும் செல்வராஜன் கல்வி அறக்கட்டளை என்கின்ற நிறுவனத்திற்கு கட்டடம் கட்ட பேரூராட்சியின் மூலம் 2004ஆம் ஆண்டு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரால் கட்டட அனுமதி கோரி சமர்ப்பிக்கப்பட்ட கிரையப் பத்திரப் பதிவு ஆவணங்களின் அடிப்படையில் மேற்கண்ட கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை தெரிவித்து மேற்கண்ட கிரையப் பத்திரத்தின் நகலினை இம்முறை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்.

2008–2009 முதல் 2023–2024 வரையிலான காலத்திற்கு மேற்கண்ட செல்வராஜன் கல்வி அறக்கட்டளை கட்டடத்திற்கான சொத்து வரி கேட்பு நிர்ணயம் செய்யப்பட்டு, அந்நிறுவனத்திற்கு தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 24.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**7) மனுதாரரின் புகார் மனு அவரது எழுத்துபூர்வ வாக்குமூலம், சேத்துப்பட்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை, உரிய ஆவணங்களுடன் இம்முறைமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டன.**

8) திருவண்ணாமலை மாவட்டம், குன்னத்தூர் என்கிற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு.கே.இப்ராஹிம் என்பவர் தனது 15.07.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் சேத்துப்பட்டு பேரூராட்சியில் அமைந்துள்ள திவ்யா கல்வி அறக்கட்டளைக்கு சொந்தமான கல்விக்கூடக் கட்டடங்களை தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு சொந்தமான நிலத்தில் வாரியத்தின் தடையில்லாச் சான்று இல்லாமல் போலி பட்டா மூலம் கட்டப்பட்டு, 1995ஆம் ஆண்டு முதல் 2023 வரையிலான மேற்படி கட்டடங்களுக்கான சொத்து வரி மற்றும் இதர வரிகளை பேரூராட்சிக்கு செலுத்தப்படவில்லை என புகாராக தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு பேரூராட்சிக்குட்பட்ட செஞ்சி சாலையில் திரு.செல்வராஜன் கல்வி அறக்கட்டளையின் சார்பாக நடந்து வரும் கல்விநிலைய கட்டடங்களுக்கான திட்ட அனுமதி மற்றும் கட்டட அனுமதியானது மனுதாரால் (நிலஉரிமையாளரால்) சமர்ப்பிக்கப்பட்ட கிரையப் பத்திரப் பதிவு ஆவணங்களின் அடிப்படையில் பேரூராட்சியால் 2004ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது என்பதை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

மனுதாரரால் புகார் மனுவில் தெரிவித்துள்ளபடி திரு.செல்வராஜன் கல்வி அறக்கட்டளையில் பேரூராட்சிக்கு 2008–2009 ஆம் ஆண்டு முதல் 2023–2024ஆம் ஆண்டுகள் வரையிலான மேற்படி திரு.செல்வராஜன் கல்வி அறக்கட்டளை கட்டடத்திற்கான சொத்துவரி மொத்தம் ரூ.71,55,196/– என நிர்ணயம் செய்யப்பட்டு அவ்வறக்கட்டளைக்கு தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது. மேற்காணும் நிலுவை சொத்து வரித் தொகையை கல்வி அறக்கட்டளையிலிருந்து வசூல் செய்வதில் உடனடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், இனிவருங்காலங்களில் இதுபோன்ற பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாவண்ணம் கவனத்துடன் செயல்படுமாறும் சேத்துப்பட்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேற்கண்ட கல்வி நிறுவன கட்டடங்களுக்கு 2004ஆம் கட்டட அனுமதி அளித்தும் நாளதுவரை சொத்துவரி வசூலிக்கத் தவறிய செயல் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை கண்டறிந்து அவர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் கிரையப் பத்திரப்பதிவு ஆவணங்களின் அடிப்படையில் திரு.செல்வராஜன் கல்வி அறக்கட்டளைக்கு கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள நிலையில் மனுதாரர் திரு. கே. இப்ராஹிம் என்பவர் தனது 15.07.2023 நாளிட்ட மனுவில் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு சொந்தமான நிலத்தில் வாரியத்தின் தடையில்லாச் சான்று இல்லாமல் கட்டப்பட்டுள்ளன என புகார் தெரிவித்திருப்பதால், இப்பொருள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு தொடர்புடையதாகும். எனவே மனுதாரர் புகாராக தெரிவிக்கும் தமிழ்நாடு வக்ஃப் வாரிய தடையில்லாச் சான்று பெறாமல் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் புகாரினை குறித்து தமிழ்நாடு வக்ஃப் வாரியம் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என

இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து மனுதாரர் திரு. கே. இப்ராஹிம் சமர்ப்பித்துள்ள 15.07.2023 நாளிட்ட மனுவின் நகல் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு அனுப்பப்படுகிறது.

2023–ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. கே. இப்ராஹிம்,
3/200, புதுத்தெரு
குண்ணத்தூர், ஆரணி வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
சேத்துப்பட்டு சிறப்புநிலை பேரூராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்) பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,சென்னை – 600 028.

5) தலைவர்,
தமிழ்நாடு வக்ஃப் வாரியம்,
எண்,1 ஜாபர் சிராங் தெரு,
வள்ளல் சீதக்காதி நகர்,
சென்னை–600 001

6) வக்ஃப் வாரிய கண்காணிப்பாளர்,
வேலூர் சரகம், பஹதூர்ஷா மஸ்ஜித் வளாகம்,
8, ஆரணி ரோடு, சாய்நாதபுரம், வேலூர் 632 001

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//